DEPOSITION OF WITNESS
(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
MCOP NO. 98/2018
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : PW2 |
| Name | : வெள்ளத்துரை |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 21.04.2026 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் இம்மனுவின் மனுதாரர் தரப்பு இரண்டாவது சாட்சி ஆவேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன்.

**<u>3 ம் எதிர் மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 9 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். மாரியம்மாள் எனது மனைவி ஆவார். விபத்து நடந்த நேரம் மாலை 6.45 மணி இருக்கும் அப்போது லேசாக இருட்டிக்கொண்டிருந்தது. எதிரே வரக்கூடிய வாகனத்தில் முகப்பு விளக்கு எரிந்து கொண்டிருந்ததாக என்றால் நான் அதை கவனிக்கவில்லை . எனது மனைவி கவனமாகவும், சாலையின் விதிகளை மதித்து நடந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்று சொன்னால் சரியல்ல. சாலையை கடக்கும்போது சாலையின் மத்திய பகுதியில் கவனக்குறைவாக வந்ததால் தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல இருசக்கர வாகனம் பயங்கர வேகமாக வந்து எனது மனைவி மீது

மோதிவிட்டது. விபத்து நடந்தது முதல் நான் எனது மனைவியுடன் தான் இருந்தேன் என்றால் சரிதான். விபத்து நடந்து 2 நாட்கள் கழித்து தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம் என்று சொன்னால் நான் கொடுக்கவில்லை திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு தகவல் கொடுத்தார்கள். அதன் பின்பு தான் வழக்கு போட்டார்கள் என்று சொன்னால் சரிதான். எனது மனைவிக்கு தற்போது விபத்தினால் ஏற்பட்ட காயங்கள் சரியாகி தற்போது நல்ல உடல் நலத்துடன் இருந்து வேலை செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவரால் முன்பு போல சரியாக வேலை செய்ய முடியவில்லை. நான் எனது மனைவிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்த சமயத்தில் சம்பவ இடத்தில் இல்லை என்றாலும், சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், எனது சாட்சியம் நம்பத்தகுந்த சாட்சியம் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/–P.Mahindra Varma
Subordinate Judge,
Sankarankovil.